

கழக பொதுச் செயலாளர், நீர்வளம், சட்டமன்றம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களை மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியைச் சேர்ந்த தே.மு.தி.க. கட்சியின் பொருளாளர் – மாநிலங்களவை உறுப்பினர் சுதீஷ், காட்பாடி இல்லத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்து காட்பாடி சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளராகப் போட்டியிடுவதை முன்னிட்டு வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வின் போது வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும் வேலூர் மக்களவை உறுப்பினருமான டி.எம்.கதிர் ஆனந்த் உடனுள்ளார்.

### 2026 சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம்

# ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி தொகுதிகளிலும் உள்ள கழக நிர்வாகிகளோடு கலந்துரையாடல்!

### மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை



திருவள்ளூர் ஏப் 02;-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அனைத்து தொகுதிகளிலும் உள்ள கழக நிர்வாகிகளுடன் 03.04.2026 (வெள்ளிக்கிழமை) நண்பகல் 12.00 மணிக்கு காணொலி மூலம் கலந்துரையாடுகிறார். இந்நிலையில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி ஆகிய இரண்டு தொகுதிக்கான கலந்துரையாடல் நிகழ்ச்சி ஆவடி மாநகராட்சி பட்டாபிராம் தண்டரை பகுதியில் அமைந்துள்ள ஜெய்கிறிஸ் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது

இக்கூட்டத்தில் கழக வேட்பாளர்கள், மாநகர- பகுதி - நகரம் - ஒன்றியம் - பேரூர் வட்டக் கழகச் செயலாளர்கள் கழக நிர்வாகிகள் மற்றும் தொகுதிக்கான கேட்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக 12 மணி அளவில் காணொளி நிகழ்ச்சி நடைபெற உள்ளதால் அனைவரும் 11:30 மணி அளவில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் தமது அறிக்கையில் தெரிவித்து கொண்டார்.

### பச்சையப்பன் கல்லூரி நிறுவனர் –

# கல்வி வள்ளல் பச்சையப்பர் 232-ஆம் ஆண்டு நினைவு நாள்! சிலைக்கு மரியாதை!

### மு.பெ.சரவணன் ஏற்பாடு! வழக்கறிஞர் இரா.கிரிராஜன் – மாணவர்கள் – புகழ் வணக்கம்!



சென்னை, ஏப்.2-

பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மாணவர்கள் நலனுக்காக ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி பச்சையப்பர் கல்லூரி.. பச்சையப்பன் கல்லூரி நிறுவனர் கல்வி வள்ளல் பச்சையப்பர் 232 ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு பச்சையப்பன் கல்லூரி மாணவர் தி.மு.க. முன்னாள் செயலாளர் மு.ப. சரவணன் ஏற்பாட்டில் 31. 03.26 அன்று காலை 9.00 மணி அளவில் பச்சையப்பர் சிலைக்கு பச்சையப்பன் கல்லூரி முன்னாள் மாணவர் பேரவைத் தலைவர் மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் கிரிராஜன் மாலை அணிவித்து கல்லூரி முன்னாள் மாணவர்கள் பெருமளவில் திரண்டு பச்சையப்பர் அவர்களுக்கு புகழ் வணக்கம் செலுத்தினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் 1961 முதல் 2023 வரை படித்த முன்னாள் மாணவர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

அண்ணா நகர் பகுதி தி.மு.க. செயலாளர் ச. பரமசிவம், கந்தசாமி நாயுடு கல்லூரி முதல்வர் வா.மு.சே. முத்துராமலிங்க ஆண்டவர் ,திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் விஜயகுமார் உள்ளிட்ட கல்லூரி முன்னாள் பேரவைத் தலைவர்கள் செயலாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கும் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்கள். கல்வி வள்ளல் பச்சையப்பர் அவர்களுக்கு புகழ் வணக்கம் செலுத்தியோர் பட்டியல் வருமாறு: -

மாநிலங்களவை உறுப்பினர் இரா. கிரிராஜன் அண்ணா நகர் பகுதி செயலாளர் பரமசிவம் கந்தசாமி நாயுடு கல்லூரி முதல்வர் வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் விஜயகுமார், மு.ப.சரவணன், வழக்கறிஞர் வெற்றி வேலன், அறிவுடை நம்பி, ஜீவரத்தினம், சேத்துப்பட்டு ரவி, சசி, ஏ.வி.ராமநாதன், வழக்கறிஞர் பாஸ்கரன், ஆஸ்திரேலியா சுசாந்த், எல் ஐ சி கணேசன், பேராசிரியர் ரவீந்திரன், பேராசிரியர் முருகவேள், வழக்கறிஞர் காட்டூர் சம்பத், வழக்கறிஞர் அன்பழகன், கோபிகிருஷ்ணன், இளங்கோ, தின சந்திரன், லோகநாதன், ஷெனாய் நகர் ரவி, பழனி, அரும்பாக்கம் ரவி, ஜெயக்குமார், வரதராஜன், துளசி குருபரன், தினேஷ், மகேந்திர பாபு, நாகராஜன், நந்தா, பீட்டர் ஜோயல், பிரசன்னா, அமைந்தகரை ஸ்ரீதர், சூசைராஜ், சுரேஷ் ராஜ், விஜயகுமார், தாடி சுதா, ஏ.கே.என். சீனிவாசன், ஆவுடையப்பன், கிருஷ்ணன், கதிர்வேல், ராவ், ராஜா, நாராயணன், அரவிந்த் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.கழக வேட்பாளர்

# மா.சுப்பிரமணியன் வீதி, வீதியாக தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்!

### சைதை மேற்கு பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி அறிவிப்பு

சென்னை.ஏப்.2-

மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் நாளை (3-4-2026) 142 அ வட்டத்தில் வீதி, வீதியாக சென்று பொதுமக்களிடம் வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் வருமாறு:-

காலை 7 மணி முதல் 12 மணி வரை

சுப்பிரமணிய சுவாமி கோயில் தெருவில் தொடங்கி, ஒத்தவாடை தெரு, கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெரு, வி.எஸ்.முதலி தெரு (வழியாக), சுப்பிரமணிய முதலி தெரு, குளக்கரைதெரு, காரணீஸ்வரர் கோயில் தெரு, பிராமின் தெரு வழியாக, சௌந்தரேஸ்வரர் கோயில் சுற்று, மாரி ஹோட்டல் வழியாக, வி.எஸ்.முதலி தெரு, கிழக்கு சுப்பிரமணிய கோயில் தெரு, வி.வி. கோயில் தெரு திருமண மண்டபம் வழியாக, மேற்கு சுப்பிரமணிய கோயில் தெரு, செம்பட தெரு, ஜெயராம்தெரு, பெருமாள் கோயில் தெரு, குளம் கோயில் சுற்று, இளையாழ்வார் கோயில் தெரு, ரங்கபாஷ்யம் தெரு, கவரைத் தெரு வழியாக திவான் பாஷ்யம் தெரு முடிவடையும். மீண்டும் மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு...

மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை

வாணியர் தெரு வழியாக மேற்கு ஜோன்ஸ் சாலை, தாடிரெத்தினம் தெரு, கம்பர் தெரு சுற்று, திருவள்ளுவர் தெரு, கோடம்பாக்கம் சாலை வழியாக, சைதை சம்பந்தன் தெரு, முருகன் தெரு, சுப்பிரமணிய சாலை வழியாக, ஏழுமலை தெரு, காமக்கோடி தெரு, பாலகிருஷ்ணன் தெரு, ஆதிகேசவன் தெரு, குமாரசாமிதெரு, முனுசாமி தெரு, ராமசாமி தெரு, மேற்கு ஜோன்ஸ் சாலை, பவளவண்ணன் சுரங்கப்பாதை, கிருஷ்ணப்பிள்ளை கார்டன் 1, 2, 3, குயவர் வீதி, பாலாஜிசிங் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, சேஷாசலம் தெரு, பஜார் சாலை, தர்மராஜாகோயில் தெரு, ஜீயர் சந்து, ஜூனிஸ் சாலை, குருநாத் ஸ்டோர், பஜார் சாலை, பூக்கார தெரு, ஜெயராம் தெரு, ஜூனிஸ் சாலை, சைதாப்பேட்டை மார்க்கெட், குருநாத் ஸ்டோர் சாலை முடிவு.

எனவே மேற்கண்ட வாக்குச் சேகரிப்பு நிகழ்வில் சைதை மேற்கு பகுதி நிர்வாகிகள், கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் பங்கேற்றுச் சிறப்பித்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்கு பகுதி, 97 வது வட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி, வட்டச் செயலாளர் விக்னேஷ் சீனிவாசன் தலைமையில் வட்டக் கழக தேர்தல் பணிமனையினை கழக வெற்றி வேட்பாளர் கார்த்திக் மோகன், சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன், பகுதிச் செயலாளர் வெ.வாசு, தொகுதி பார்வையாளர் ஓ.ஏ.நாகலிங்கம், டி.வி.செம்மொழி எம்.சி ஆகியோர் பணிமனையை திறந்து வைத்தனர். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன், கூ.பீ.ஜெயின் எம்.சி, லதா வாசு எம்.சி, கூட்டணி கட்சி நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், BLA2, BDA, BYO உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியின் வெற்றி வேட்பாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆதரித்து சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி 62அ வட்டத்தில் பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் மாமன்ற உறுப்பினர் எஸ்.மதன்மோகன் எம்.சி. மார்க்கெட் பகுதியில் உள்ள வியாபாரிகளிடம் சென்று பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வில் வட்ட நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட கழக தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.

---

### சென்னை கிழக்கு மாவட்டம், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திரு.வி.க.நகர் தெற்கு பகுதி வட்ட தேர்தல் பணிமனைகள் திறப்பு, வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நலவாழ்வு சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனை மற்றும் துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் வட்டவாரியாக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறும் விவரம்!



## அமைச்சர் - மாவட்ட செயலாளர் - பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

| நாள் - 2.4.2026 வியாழன் | வட்டங்கள் | இடம் |
|---|---|---|
| மாலை 4.00 மணி | 75 வது வட்ட பணிமனை திறப்பு | எண்.184/90, பராக்கா மெயின் ரோடு, நம்மாழ்வார்பேட்டை, சென்னை–12. திரு.வி.கநகர் தெற்கு பகுதி |
| மாலை 4.30 மணி | 73வது வட்ட பணிமனை திறப்பு | எண்.7, அலெக்சாண்டர் லைன், தாஷா மகான், சென்னை–12. திரு.வி.கநகர் தெற்கு பகுதி |
| மாலை 5.00 மணி | வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்டட நலவாழ்வு சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனை | ஸ்ரீ சாய் மினி ஹால், 4வது மெயின்ரோடு, சிட்கோநகர் வில்லிவாக்கம் மேற்கு பகுதி |
| மாலை 5.45 மணி | 94வது வட்டத்தில் வாக்கு சேகரிப்பு | சிட்கோ நகர் வில்லிவாக்கம் மேற்கு பகுதி |
| மாலை 7.00 மணி | 60, 60அ ஆகிய வட்டத்திற்குட்பட்ட செயல்வீரர்கள் கூட்டம் | ஆயிஷாமஹால், மரைக்காயரர் தெரு துறைமுகம் கிழக்கு பகுதி |
| மாலை 7.30 மணி | 59, 59அ ஆகிய வட்டத்திற்குட்பட்ட செயல்வீரர்கள் கூட்டம் | ஸ்ரீராம்தேவ் பவன் 28, ஏகாம்பரேஸ்வரர் அக்ரஹாரம், தங்கசாலை துறைமுகம் மேற்கு பகுதி |
| மாலை 8.00 மணி | 54, 54அ, 54ஆ ஆகிய வட்டத்திற்குட்பட்ட செயல்வீரர்கள் கூட்டம் | சிவாஞ்சிபவன் துறைமுகம் மேற்கு பகுதி |

மேற்கண்ட தேர்தல்பணிமனை திறப்பு விழாவிலும், நலசங்கங்கள் கலந்தாய்விலும் வாக்குசேகரிப்பிலும் செயல்வீரர்கள் கூட்டத்திலும் அந்தந்த பகுதிகளுக்குட்பட்ட நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**பி.கே.சேகர்பாபு**
அமைச்சர் – செயலாளர்
சென்னை கிழக்கு மாவட்ட திமுக

### மேற்காசியப் போரில் நடுக்கடலில் கொல்லப்பட்ட 3 இந்திய நாட்டு மாலுமிகள்,

# 4 மாலுமிகள் காயம், ஒருவரைக் காணவில்லை!

### சொந்த நாட்டுக் குடிமக்களை காக்கத் தவறிய ஒன்றிய அரசிற்கு– கே.இ.பிரகாஷ் எம்.பி. கடும் கண்டனம்!



புதுடெல்லி, ஏப்.2

மேற்காசியப் போரால் பெர்சிய வளைகுடாவில் சிக்கித்தவிக்கும் இந்திய நாட்டைச் சேர்ந்த மாலுமிகளின் நிலை குறித்து, நாடாளுமன்றத்தில் துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்திடம் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு அளிக்கப்பட்டுள்ள விவரங்களில் இருந்து, வெளிநாட்டுக் கப்பல்களில் பணிபுரிந்து வந்த இந்திய நாட்டைச் சேர்ந்த மாலுமிகளில் 3 பேர் கொல்லப்பட்டுள்ளனர், 4 பேர் காயமுற்றுள்ளனர், ஒருவரைக் காணவில்லை ஆகிய அதிர்ச்சித் தகவல்கள் வெளிவந்துள்ளன. இந்தியக் கப்பல்களில் பணியாற்றுபவர்களின் நிலை குறித்த விவரங்களை ஒன்றிய அரசு வழங்கவில்லை.

தக்க நேரத்தில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து நம் நாட்டு குடிமக்களை காக்கத்தவறிய இந்த ஒன்றிய அரசிற்கு, எனது வலுவான கண்டனங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

1. கொல்லப்பட்ட இந்திய மாலுமிகள் குறித்து பதிலடி நடவடிக்கை எடுக்காத ஒன்றிய அரசு

மேற்காசியப் போர் பதற்றம் ஏற்பட்ட சூழலில் இருந்தே, வெளிநாட்டுக் கப்பல்கள் மற்றும் இந்தியக் கப்பல்களில் பணியாற்றும் இந்தியாவைச் சேர்ந்த மாலுமிகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என்று நாட்டு மக்களும் அவர்களின் உறவினர்களும் ஒன்றிய அரசிற்கு கோரிக்கை விடுத்தார்கள்.

ஆனால், இந்த கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறிய ஒன்றிய அரசு, தற்போது நம்முடைய நாட்டைச் சேர்ந்த 3 மாலுமிகளை பலி கொடுத்துள்ளது. மேற்கொண்டு 4 பேர் காயமுற்றிருக்கிறார்கள். காணாமல் போயிருக்கும் ஒருவரும் மீட்கப்படுவாரா என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

ஒன்றிய அரசு அளித்த விவரங்களின் படி, இந்த சம்பவம் நடந்து பல வாரங்கள் கடந்துவிட்டன. எனினும், இதற்குரிய பதிலடி நடவடிக்கைகள் எதையும் இது வரை எடுக்காமல், கோழைத்தனமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. குறைந்தபட்சம், ஒரு கண்டன அறிக்கையைக் கூட வெளியிட துணியவில்லை.

2. எஞ்சியிருக்கும் மாலுமிகளின் உயிருக்கும் அச்சுறுத்தல் சரியான பதில் அளிக்காமல் மழுப்பும் ஒன்றிய அரசு

கொல்லப்பட்டவர்களின் உடல்கள் இந்தியா கொண்டுவரப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதா அல்லது நடுக்கடலிலேயே அவர்கள் விடப்பட்டார்களா என்று தெரியவில்லை. காயமுற்றவர்களும் மீட்கப்பட்டு இந்தியா கொண்டுவரப்பட்டார்களா விடையில்லை. என்பதற்கு

இந்த சூழலில், மேற்கொண்டு ஆயிரக்கணக்கான மாலுமிகள் பெர்சிய வளைகுடாவில் சிக்கித் தவிக்கிறார்கள். இவர்களின் நிலை என்ன, இவர்களின் பாதுகாப்பிற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற கேள்விகளுக்கு, ஒன்றிய அரசு சரியான பதிலை அளிக்காமல் மழுப்பியுள்ளது.

3. பிரதமரின் 'விஷ்வகுரு' வேடம் மீண்டும் கலைந்துள்ளது:

சர்வதேச அரசியல் சூழல் ஏற்படும் போதெல்லாம், 'இது விஷ்வகுருவின் அரசாங்கம்' என்று போலியான ஒரு வீரக் கதையாடலை ஒன்றிய அரசும், அதன் ஆதரவாளர்களும் உருவாக்குகின்றனர். 'மற்ற நாடுகள் நம் பிரதமரைப் பார்த்து அஞ்சுகின்றன' என்று கூச்சமே இல்லாமல் நாட்டுமக்களை நம்பவைக்க முயல்கின்றனர்.

ஆனால், நடைமுறைச் சூழல் வேறு. சீன ஆக்கிரமிப்புக்கு மவுனம் காத்தது முதல் இப்போது பெர்சிய வளைகுடாவில் நம் மாலுமிகளை தவிக்க விட்டிருப்பது வரை, இந்த விஷ்வகுருவின் அரசாங்கம் இந்தியாவின் தன் மானத்தையும் இந்தியர்களின் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

இனிமேலும் வீரவசனங்களைப் பேசி நாட்டு மக்களை ஏமாற்றாமல், நமது மாலுமிகளை பாதுகாப்பாக மீட்டுக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை, ஒன்றிய அரசு உடனடியாக எடுக்க வேண்டும்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

### நே.சிற்றரசு – தயாநிதிமாறன் – அன்பகம் கலை – எழிலன் நாகநாதன் – வினோத் வேலாயுதம் – சூர்யா கிருஷ்ணமூர்த்தி பங்கேற்பு!

# ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 109 வது வட்டத்தில் மு.க.தமிழரசு வாக்கு சேகரிப்பு!

### பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை!

சென்னை, ஏப். 2-

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதியில் மு.க.தமிழரசு அவர்கள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் மருத்துவர் எழிலன் நாகநாதனை ஆதரித்து இன்று (02.04.2026 - வியாழக்கிழமை) காலை 7:00 மணி முதல் 10:00 மணி வரை, மாலை 5.00 மணி முதல் இரவு 8:00 மணி வரை 109வது வட்டத்திற்க்குட்பட்ட அனைத்து தெருக்களிலும் வாக்கு சேகரிக்க வருகை தர உள்ளார்.

இந்த பிரச்சாரத்தில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நேற்று சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, தேர்தல் பொறுப்பாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

எனவே பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், பாக பொறுப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி மன்ற உறுப்பினர்கள், பி.எல்.ஏ-2, பி.எல்.சி மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்

இவ்வாறு ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை விடுத்துள்ளார்.



ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 112(அ) வட்டத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் மருத்துவர் எழிலன் நாகநாதனை ஆதரித்து மு.க.தமிழரசு வாக்கு சேகரித்தார். உடன் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம், தொ.மு.ச. மணிமாறன் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள்,வட்டக் கழகச் செயலாளர்கள் மு.மோகன் வரதை த பரி , மற்றும் கூட்டணி கட்சியினர், கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.